சுருக்கம்

பொதுப்பணிகள் - தமிழ்நாடு அமைச்சுப்பணி - கருணை அடிப்படையில் பணிநியமனம் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை - திருவண்ணாமலை மாவட்டம் - பணியிடைக் காலமான ஊராட்சி செயலர் திரு.சி.ஐயப்பன் என்பவரின் மகன் திரு.ஐ.பாலாஜி, இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் - பணிவரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ5) துறை

அரசாணை (4ப) எண்.20 நாள் 17.05.2022.
சுபகிருது, வைகாசி 03,
திருவள்ளுவர் ஆண்டு 2053.
படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள்: 23.01.2020.
2. திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறை கடித ந.க.எண் 11558/2020/பஅ3, நாள்: 12.10.2021.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித ந.க.எண்.73170/2021/டி1, நாள்: 02.02.2022.

*****

ஆணை:

மேலே மூன்றில் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதத்தில், திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் ஊராட்சி ஒன்றியத்தில் புதுப்பட்டு ஊராட்சி செயலராகப் பணிபுரிந்து 05.06.2020 அன்று காலமான திரு.சி.ஐயப்பன் என்பவரின் வாரிசுதாரரும் மகனுமான திரு.ஐ.பாலாஜி என்பவருக்கு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறையின்படி கருணை அடிப்படையில், திருவண்ணாமலை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, அத்தனியர் 13.10.2021 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருவதால், அன்னாரின் பணியை வரன்முறை செய்து ஆணையிடும்படி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலும், மறைந்த அரசு ஊழியர் பணிவரன்முறை செய்யப்பட்ட பணியாளர் என்றும், அவரது குடும்பம் வறிய நிலையில் இருந்தது என்றும், அவரது மகன் திரு.ஐ.பாலாஜி கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 14.08.2020 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த தேதி 14.09.2000 என்றும், பணிநியமனம்

01/02/2024
Addl.Collector (Dev.)/
Project Director,
DRDA,Tiruvannamalai

கோரி விண்ணப்பித்த நாளில் தனியரின் வயது 19 என்றும், அவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவருக்குப் பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துரு உரிய அசல் ஆவணங்களுடன் மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி அரசால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்கீழ், இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.ஐ.பாலாஜி என்பவர் பணிநியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், திருவண்ணாமலை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் இளநிலை உதவியாளர் பதவியில் 13.10.2021 முற்பகல் முதல் தனியரின் பணியினை அவர் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வு பெற உரிய விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண்.6945/ட்டி1/2022, நாள்:18.04.2022 -ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ.அமுதா,
அரசு முதன்மைச் செயலாளர்.

01/06/2022
Addl.Collector (Dev.)/
Project Director,
DRDA,Tiruvannamalai

பெறுநர்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை-15.
மாவட்ட ஆட்சித் தலைவர், திருவண்ணாமலை மாவட்டம்.
திரு.ஐ.பாலாஜி, இளநிலை உதவியாளர்,
திருவண்ணாமலை மாவட்டம். (வழி: மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருவண்ணாமலை மாவட்டம்)
மாநிலக் கணக்காயர், சென்னை -18/35.
கருவூல மற்றும் கணக்குத் துறை ஆணையர், சென்னை-15
மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், திருவண்ணாமலை மாவட்டம்.

நகல்:

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

ந.க.எண். 11558/2020/பஅ3

மாவட்ட ஆட்சியரகம்
(வளர்ச்சி பிரிவு),
திருவண்ணாமலை.
நாள்: -07-22

(அனுப்பப்படுகிறது)

மாவட்ட ஆட்சித் தலைவருக்காக
திருவண்ணாமலை.

பெறுநர்

திரு. ஜ. பாலாஜி,
இளநிலை உதவியாளர்,
மாவட்ட ஆட்சியரகம் (வளர்ச்சி பிரிவு),
திருவண்ணாமலை — உரிய வழியாக

நகல்: மாவட்ட ஆட்சித்தலைவர் / தலைவர், திட்ட இயக்குநர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,
திருவண்ணாமலை.

நகல்: "பஅ6" பிரிவு - உரிய நடவடிக்கைக்காக

நகல்: "பஅ3" பிரிவு இறுதிக் கோப்பு

Addl.Collector (Dev.)/
Project Director,
DRDA,Tiruvannamalai

ந.க.எண். 866/2022/அ1

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,
திருவண்ணாமலை.
நாள்: .08.2022.

// அனுப்பப்படுகிறது //

4/8/22
உதவி திட்ட அலுவலர் (உட்கட்டமைப்பு-1),
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,
திருவண்ணாமலை.

3/4

பெறுநர்
திரு. ஜ. பாலாஜி,
இளநிலை உதவியாளர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,
திருவண்ணாமலை.

04-08-2022